## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**21.07.2026**

OS. No. 235/2012

பக்கம் – 2

DW3 – வெங்கடேசன்

**வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் 3 ஆம் பிரதிவாதி. நான் தனிப்பட்ட முறையில் எதிர் உரை தாக்கல் செய்யவில்லை என்றும் 4 ம் பிரதிவாதியின் எதிர் உரையை ஏற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் வாதிகள் மற்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் உறவினரா என்றால் இல்லை . நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான் . நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் சென்னை ஆலப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். D1, D2 எனக்கு எப்படி தெரியும் என்றால் ஒரு தரகர் மூலமாக தெரியும். D1,D2 அவரது சொத்தை என்னிடம் நேரடியாக வந்து விற்றுதர சொல்லி கேட்டார்களா என்றால் கேட்டார்கள் . அதன்படிதான் D1,D2 எனக்கு அந்த தாவா சொத்தை விற்பதற்காக Power கொடுத்தார்களா என்றால் அதற்காகதான் கொடுத்தார்கள் . D1,D2 எனக்கு power கொடுத்தபோது வாதிகள் இருவருக்கும் என்ன வயது என்றால் 14 மற்றும் 11 ஆகும். இந்த தாவா சொத்து minor சொத்து என்றால் சரிதான் . Ex.A3 மைனர்கள் சொத்தாக வாதிகள் பெயரில் வாங்கப்பட்டுள்ள சொத்து என்றால் சரிதான் . Ex.A3 முன்னிலையில் கிரையம் பெறும்போது மைனர்களாகிய வாதிகளின் வயது முறையே 6 மற்றும் 2.1/2 ஆகும். அந்த Ex.A3 க்காகதான் வாதிகளுக்காக D1,D2 guardian ஆக இருந்து Ex.A3 சொத்தை கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான் . Ex.A2 பதிவு செய்யப்பட்ட Power பத்திரம் என்றால் சரிதான். அந்த் Ex.A2 ன் இறுதியில் இந்த Power பத்திரத்திற்கு நாங்கள் எந்த வித பிரதிபலனும் பெறவில்லை என்று D1,D2 குறிப்பிட்டு சொல்லியுள்ளதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான் ஆனால் பணம் பெற்றுள்ளனர் . அவ்வாறு D1,D2 பணம் பெற்றுள்ளார்கள் என்பதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . Ex.A2 எந்த பிரதிபலனும் இல்லாமல் இருப்பதால் இந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல . Ex.A5 Power பத்திரத்தின் அடிப்படையில்தான் D4 க்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான் . Ex.A2 ஆவணப்படி கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என்று உள்ளதுபோல் எந்த கணக்கும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல . இந்த கிரையம் இளவர்களின் சொத்து என்ற

கோதாவில் மாவட்ட நீதிமன்றத்தில் கிரையம் செய்வதற்கு முன்பாக அனுமதி பெறப்பட்டதா என்றால் இல்லை காரணம் D1,D2 வாதிகளின் இயற்கை காப்பாளர் என்பதால் பெறவில்லை . Ex.A5 கிரையம் மைனர் சொத்து என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . தாவா சொத்து இன்றைய தேதிவரை காலிமனையாக உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது . Ex.A5 Power Ex.A3 இரத்து பத்திரம் மூலம் இரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது . எனக்கு மைனர் சொத்தை Power மூலமாக நான்காம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தது சட்டப்படி செல்லாது என்றும் அதன்படி 4 ஆம் பிரதிவாதி வாங்கிய கிரைய சொத்தும் செல்லாது என்று சொன்னால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.